அந்த வகையிலே கூட நாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, பரீட்சார்த்தமாக ஓரிரு இடங்களில் நியமிக்கலாம் என்று கூட என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது பல அரசு மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே அவைகளை விரிவுபடுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போது வறட்சிப் பணிகளின் கீழ் பல்வேறு இடங்களில் பொதுவாக கிணறுகள் அமைத்துக் கொடுக்கின்ற பணிகள் நடைபெற்று வருகிற காலக் கட்டத்தில், அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அந்த டிரவுட் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, தண்ணீர் வசதிகளை அந்தந்த ஆஸ்பத்திரிகளில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி வறட்சிப் பணிகளின் கீழ் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிற இந்த நேரத்திலே, எந்தெந்த மருத்துவமனைகளிலே தண்ணீர் இல்லையோ அந்த மருத்துவமனைகளுக்கு முதலில் முக்கியத்துவம் அளித்து தண்ணீர் வசதியைத் தரவேண்டும் என்று அரசாங்கம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறது. நான் கூட பல அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். மாவட்ட கலெக்டரிடத்திலே கூட மருத்துவமனைகளில் தண்ணீர் இல்லை என்ற பிரச்சனை எங்கு இருக்கிறதோ அதை முதலில் தீர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அந்தந்த மருத்துவமனைகளில் இருக்கக் கூடியவர்களும் மாவட்ட கலெக்டரிடம் தொடர்புகொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

கருத்தடை அறுவை சிகிச்சைகள்.

769—(*வினா எண். 7195) திரு மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ல் கருத்தடை அறுவை சிகிச்சைகள் திருமணம் ஆகாதவர்களுக்கும் செய்யப்பட்டுள்ளதாக அரசிற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். இரண்டு புகார்கள் வந்துள்ளன.

1986 மே 13]

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாணியம்பாடி தாலுக்காவில் உள்ள முசிலம்பூரில் உள்ள திருமணமாகாத ஒருவருக்கு அரக்கோணம் அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளது.

சேலம் பாரதிநகரைச் சேர்ந்த திருமணமாகாத ஒருவருக்கும் சேலம் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக மற்றொரு புகார் வந்துள்ளது. இவ்வாறு இவர்களை அறுவைச் சிகிச்சைக்குக் கூட்டிச் சென்றவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இருவருக்கும் ரி-கானலைசேஷன் செய்யவும் உத்திரவிடப்பட்டு உள்ளது.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, தவறுதலாக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட அந்த இளைஞர்களுக்கு அரசு ஏதேனும் நிதியுதவி செய்வதற்கு முன் வந்திருக்கிறதா? அப்படியில்லை என்றால் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ரீ-கானலைசேஷன்' செய்து உதவித் தொகை கொடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, திருமணம் ஆனவர்களுக்குத்தான் குழந்தைகள் பிறக்க வேண்டுமென்ற நிலை இல்லை. திருமணம் ஆகாதவர்கள் கூட இந்த நாட்டினுடைய ஜனத்தொகையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே திருமணம் ஆகாதவர்களுக்கு கருத்தடை அபரேஷன் செய்யக்கூடாது என்று சட்டம் ஏதாவது இருக்கிறதா? ஆகவே அதற்காக கொண்டு வரப்பட்டவர்களை நாம் எதற்காக தடுத்து நிறுத்த வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மனிதாபிமான அடிப்படையில் அவர்களை தடுத்து நிறுத்த வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறோம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: Mr. Speaker Sir, the answer is not perfect. It is for the party who has been operated upon to complaint. No action can be taken on the basis of the complaint of any Hon. Member.

இங்கே திருமணம் ஆகாத இளைஞர்கள் தங்களுக்கு தவறுதலாக கருத்தடை ஆபரேஷன் செய்து விட்டார்கள், அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் குற்றம் சாட்டவில்லை. அவர்கள் அதுபற்றி சொல்லாதபோது

சட்டமன்ற உறுப்பினர்களோ, மற்றவர்களோ, திருமணம் ஆகாதவர்களுக்கு கருத்தடை ஆபரேஷன் செய்து விட்டார்கள் என்று சொல்வதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I would like to tell the Hon'ble Member that it is not on the basis of the complaint of the Hon'ble Member action has been taken. Suo Motu the Department itself is taking action. The enquiry part of it consists the whole gammut which includes the complaint of the Hon. Member. A detailed enquiry is being conducted and all necessary actions are taken.

திரு. டி. என். முருகானந்தம் : தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் சமுதாயத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்பது இந்தியாவினுடைய வளர்ச்சிக்கு அடிப்படைத் திட்டமாக இருக்கின்ற நிலையில், ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று அரசு சட்டம் கொண்டு வருமா? அதற்கு மேல் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசாங்கம் எந்தச் சலுகையும் கொடுக்காது என்று அறிவிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் மிகவும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டியது மத்திய சர்க்கார் தான். ஏனென்றால் நாம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தீவிரமாக குடும்பக் கட்டுப்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார் ஆகிய இந்த நான்கு மாநிலங்களில் இதனை அவர்கள் சரியான முறையில் கொண்டு வரவில்லை. அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இலக்கு பற்றி இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். உத்திரப் பிரதேசத்தில் 11½ கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆறு லட்சத்து 50 ஆயிரம் பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு இலக்கு வைத்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கக்கூடிய ஜனத்தொகை 4.8 கோடியாகும். 1981-ஆம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில் சொல்கிறேன். நமக்கு அவர்கள் கொடுத்திருக்கிற இலக்கு 5.6 லட்சம் என்று இருக்கிறது. இது எந்த அடிப்படையில் நியாயம்? ஆகவே நல்ல கருத்தாக இருந்தாலும், அப்படிப்பட்ட நியாயமான கருத்துக்கள் அகில இந்திய ரீதியாக ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அதை மத்திய அரசு கொண்டு வர வேண்டும். ஆகவே முதலில் அவர்கள் நான் குறிப்பிட்டிருக்கிற இந்த நான்கு மாநிலங்கள் உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

1986 மே 13]

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, திருமணம் ஆகாதவர்களுக்கும், அறுவை சிகிச்சைக்கு தகுதியற்றவர்களுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இலக்கை அடைய வேண்டுமென்று இப்படி அறுவை சிகிச்சை செய்கிற மருத்துவர்கள் மீது நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு பதில் சொல்கிறபோதே அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லி இருக்கிறேன். இரண்டு விஷயங்களிலும், மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் எழுப்பிய இந்தக் கருத்துக்கும், மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் எழுப்பியிருக்கும் கேள்விக்கும் சரிசமமாக யோசனை செய்யவேண்டியிருக்கிறது. It has to be in between the two points of view. இரண்டு கருத்துக்களுக்கும் இடையில் இருக்கிற கருத்து தான் அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே. இந்த நிரந்தர அறுவை சிகிச்சை செய்த பிறகு கூட சில தம்பதிகளுக்கு குழந்தை பிறந்து விடுகிறது. அது தம்பதிகளுடைய குறை இல்லையென்பதை நாம் அறிவோம். அப்படி அறுவை சிகிச்சைக்குப் பின்னால் குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தைகளை பாதுகாக்கிற பொறுப்பை அரசோ அல்லது அறுவை சிகிச்சை செய்த மருத்துவரோ ஏற்க வேண்டுமென்ற நிலையை அரசாங்கம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை, ஏன் என்றால், இந்த 'லாப்ரோஸ்கோபிக்' என்று ஒரு புதிய முறையில் நாம் ரப்பர் பேண்ட், ஸ்டைலேசன் பேண்ட் போடுகிற நேரத்தில் ஏறக்குறைய ஒரு சதவீதம் அது, மீண்டும் குழந்தை பெறக்கூடிய இந்த டியூப் சரியான வகையில் லொகேட் ஆகாத காரணத்தால வரக்கூடிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் சொன்ன கருத்து, நேசனல் ஹெல்த் பாலிசி உருவாக்கக் கூடிய நேரத்தில் அங்கே சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று அரசாங்கம் சட்டம் வைத்திருக்கிறது. ஆனால் ஒரே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நேரத்தில் சில தாய்மார்கள் 2 அல்லது 3 குழந்தைகள் பெற்றுவிடுகிறார்கள். அதைத் தடுக்க முடியுமா? மேலும் வெளி நாட்டில், திருமணம் ஆகாமலேயே இன்ஜெக்சன் மூலமாக குழந்தைகள் பிறப்பதாகச் சொல்கிறார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று 3 குழந்தைகள் பெற்றுக்கொள்பவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது நம் கையிலே இல்லை. ஆனால் இந்த இன்ஜக்சன் மூலமாக பரிட்சார்த்தமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். It is still in expe imental stage.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் ஆகாதவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். அதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அவர்களாகவே பெட்டிசன் கொடுத்தால் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்லுகின்ற காரணத்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள இங்கே சொல்கிறார்களே ஒழிய வேறு அல்ல. அடுத்து இன்றைய தினம் இந்த அறுவைச் சிகிச்சையைப் பொறுத்தவரையில், அதைச் செய்தவர்களுக்கே மீண்டும் செய்வதாகச் சொல்கிறார்கள். அதாவது செய்த கேசுக்கே திரும்பச் செய்கிறார்கள். இதுபோன்ற தவறான புள்ளி விவரங்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன் பகுதியில் சொல்லியிருக்கக்கூடிய கருத்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக இருக்கிறது. இரண்டாவது பகுதியில் அவர்கள் எழுப்பி இருக்கக்கூடிய கேள்வி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பது, ஏராளமான தவறுகள் செய்தவர்கள் மீது தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன்.

நவீன அரிசி ஆலைகள்.

770—(*வினா எண். 7796)—**திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—